புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன்
• திருவள்ளுவர் ஆண்டு 2054 • செப்டம்பர் 28, 2023 • புரட்சி 23 • முழக்கம் 37 • விலை ரூ.3.00

# கழக வளர்ச்சிக்கு தஞ்சை மாவட்டக் கழகம் ரூ.50,000 நன்கொடை

தஞ்சாவூர் : தஞ்சாவூர் மாவட்டக் கழகம் சார்பில் தந்தைப் பெரியாரின் 145வது பிறந்தநாள், வைக்கம் நூற்றாண்டு, முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா பொதுக்கூட்டம் 25.9.2023 திங்கள் மாலை 6 மணியளவில் நாச்சியார் கோவில் கடைவீதியில் நடைபெற்றது.

குடந்தை ஒன்றிய அமைப்பாளர் சா.வெங்கடேசன் தலைமை வகித்து வரவேற்புரையாற்றினார். தஞ்சை மாவட்ட முன்னாள் அமைப்பாளர் சோலை மாரியப்பன் தொடக்க உரையாற்றினார்.

விடுதலைவேந்தன், தஞ்சாவூர் மாவட்டத் தலைவர் சாக்கோட்டை மு. இளங்கோவன், திராவிடர் கழக குடந்தை நகரச் செயலாளர் பீ.ரமேசு ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

திருநாகேசுவரம் நா.தமிழ்மணி ரூ.5000-யை கழக வளர்ச்சி நிதியாக வழங்கினார். நாச்சியார் கோயில் சாத்தையன், ராஜ் முகமது ஆகியோரின் உதவியோடு திரட்டப்பட்ட ரூ.50,000/- தலைமைக் கழக வளர்ச்சி நிதியாக தஞ்சை மாவட்டத் தலைவர் இளங்கோவனிடம் வழங்கப்பட்டது.

திருவிடைமருதூர் ஒன்றிய அமைப்பாளர் கரிகாலன் நன்றி கூறினார்.



# நாமக்கல் – திருப்பூர் – கோவை – திண்டுக்கல் – கள்ளக்குறிச்சியில் கழகப் பரப்புரைகள்

*__நாமக்கல்__ : தந்தை பெரியாரின் 145வது பிறந்தநாள் விழா நாமக்கல் மாவட்டம் குமாரபாளையத்தில் நடைபெற்றது. கொண்டாடப்பட்டது. விழாவில் கொடியேற்றி சிந்தனை பலகை திறந்து வைக்கப்பட்டது. நிறைவாக தந்தை பெரியாரின் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.*

*மாவட்டத் தலைவர் சாமிநாதன், மாவட்டச் செயலாளர் மு.சரவணன், மாவட்ட அமைப்பாளர் முத்துப்பாண்டி, மாவட்ட காப்பாளர் கேப்டன் அண்ணாதுரை, நகரத் தலைவர் தண்டபாணி, நகரச் செயலாளர் வடிவேல் மற்றும் கழகத் தோழர்கள் திரளாக கலந்து கொண்டனர்.*

*__திருப்பூர்__ : அணைமேடு பகுதிக் கழகம் சார்பில் தந்தை பெரியாரின் 145வது பிறந்தநாளை முன்னிட்டு விளையாட்டுப் போட்டிகள் மற்றும் கலை நிகழ்ச்சிகள் 20.09.2023 புதன்கிழமை அணைமேட்டில் நடைபெற்றது. அணைமேடு டேவிட், அமுல்ராஜ் ஆகியோரது தலைமை தாங்கினார்.*

*திருப்பூர் துணை மேயர் பால சுப்பிரமணியம், மாமன்ற உறுப்பினரும் கல்விக் குழு தலைவர் பா. திவாகரன் ஆகியோர் கலந்துகொண்டு விளையாட்டுப் போட்டிகளில் வெற்றிப் பெற்றவர்களுக்கு பரிசுகளை வழங்கினர்.*

*கழகப் பொருளாளர் சு.துரைசாமி, மாவட்டத் தலைவர் முகில்ராசு, மாவட்டச் செயலாளர் நீதிராசன், ராயபுரம் கருணாநிதி, மாரிமுத்து, சரசுவதி பார்வதி, அய்யப்பன், மகிழவன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.*

*__திண்டுக்கல்:__ திண்டுக்கல் மாவட்டக் கழகம் சார்பாக வேடசந்தூர் தாலுகாவிற்குட்பட்ட சுள்ளெரும்பு நால் ரோடு, சாலையூர் நால்ரோடு, சீத்தமரத்துப்பட்டி நால்ரோடு, சேணங்கோட்டை, அய்யர் மடம், விருதலைப்பட்டி, கூம்பூர், அலகாபுரி, பூத்தாம்பட்டி, விட்டல் நாயக்கன்பட்டி, லட்சுமணம்பட்டி, தாமரைப்பாடி, வடமதுரை, அய்யலூர், வேடசந்தூர் ஆகிய பகுதிகளில் 07.09.2023 முதல் 10.09.2023 வரையிலும். நத்தம் தாலுகாவிற்குட்பட்ட ஏர்போர்ட் நகர், இராஜக்காபட்டி, அதிகாரிபட்டி, செந்துறை, நத்தம் பேருந்து நிலையம், கோவில்பட்டி, வத்திப்பட்டி, கோபால் பட்டி, சாணார்பட்டி, கொசவபட்டி, பொன்னகரம், மூலச்சத்திரம், ஸ்ரீராம புரம், கன்னிவாடி, தருமத்துப்பட்டி ஆகிய பகுதிகளில் 11.09.2023 முதல் 13.09.2023 வரை தெருமுனைக் கூட்டங்கள் நடைபெற்றது.*

*தெருமுனைக் கூட்டங்களை விளக்கி கழகத் தோழர்கள் கபாலி, பெரியார், ராஜா ஆகியோர் இணைந்து பாடல்களைப் பாடினார்கள்.*

*மாவட்ட ஒருங்கிணைப்பாளர் மாக்சிம் கார்க்கி வரவேற்புரை கூறினார். மாவட்ட இணையதள பொறுப்பாளர் ராஜா தொடக்கவுரையாற்றினர். மாவட்ட அமைப்பாளர் மருதமூர்த்தி விளக்கவுரையாற்றினார்.*

*நிறைவாக தமிழ்நாடு மாணவர் கழக பொறுப்பாளர் ஆயுதன் அவர்கள் நன்றியுரையாற்றினார்.*

*வேடசந்தூர் திராவிடர் இயக்கத் தமிழர் பேரவை ஒன்றியப் பொறுப்பாளர் ஜெயராமன், மாநில கொள்கைப் பரப்புச் செயலாளர் ரவி ஆகியோர் உணவு, தங்குமிடத்தை ஏற்பாடு செய்தனர். இதுவரை திண்டுக்கல் மாவட்டம் 72 கூட்டங்களை நிறைவு செய்துள்ளது.*

*__கள்ளக்குறிச்சி__ : கள்ளக்குறிச்சி மாவட்டக் கழகம் சார்பில் கூகையூர், சின்னசேலம், நயனார்பாளையம், இளவனாசூர் கோட்டை, சங்கராபுரம், ரோடு மாமாந்தூர், ஆலத்தூர், மூரார்பாளையம், சங்கராபுரம், பகண்டை (வானாபுரம்) கூட்டுச்சாலை, மூங்கில்துறைபட்டி, மணலூர்பேட்டை உள்ளிட்ட இடங்களில் ஆகஸ்ட் 21 முதல் ஆகஸ்ட் 25 வரை தொடர்ந்து 5 நாட்கள் 20 தெருமுனைக் கூட்டங்கள் நடைபெற்றது.*

*ஒவ்வொரு கூட்டமும் சாமிதுரை, பெரியார் வெங்கட், கடலூர் போதிசத்வா ஆகியோரின் பறையிசை நிகழ்ச்சியுடன் தொடங்கியது. நாகராசு பாடல்களை பாடினார்.*

*ரிசிவந்தியம் ஒன்றிய அமைப்பாளர் கார்மேகம், தமிழ்நாடு மாணவர் கழகம் முருகன், சங்கராபுரம் ஒன்றியச் செயலாளர் அன்புரவி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.*

*விழுப்புரம் மாவட்டத் தலைவர் இளையரசன், தலைமை செயற்குழு உறுப்பினர் அய்யனார், கள்ளக்குறிச்சி மாவட்டச் செயலாளர் இராமர், மாவட்ட துணைச் செயலாளர் வெற்றிவேல் ஆகியோர் கருத்துரையாற்றினார்கள்.*

*__கோவை__ : கோவை மாநகர மாவட்டப் பொறுப்பாளர்கள் கலந்துரையாடல் கூட்டம் 21.09.2023 அன்று நடைபெற்றது. அதில் கீழ்க்கண்ட முடிவு எடுக்கப்பட்டுள்ளது.*

*எது சனாதனம்? எது திராவிடம்? தெருமுனைக் கூட்டங்கள் 29.9.2023 அன்று கோவையில் நிறைவடையவுள்ள நிலையில் அடுத்தகட்டமாக “திராவிட அரசியலின் பெருமைமிகு அடையாளம் கலைஞர்” அவர்களின் நூற்றாண்டு விழாவை கொண்டாடும் விதமாக கோவை மாநகரப் பகுதிகளில் தெருமுனைக் கூட்டங்களும், நிறைவாக கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் கலைஞர் நூற்றாண்டு விழா பொதுக்கூட்டம் நடத்துவது என்றும் முடிவு செய்யப்பட்டது.*

**தலையங்கம்**

## உடல் உறுப்பு கொடையாளிகளுக்கு அரசு மரியாதை

விபத்தில் மூளைச் சாவு அடைந்தவர்களின் உறுப்புகள் மருத்துவமனைக்கு கொடையாக வழங்குப்படுவதில் தமிழ்நாடு முதலிடத்தில் உள்ளது. இந்த வளர்ச்சியை ஊக்குவிக்கும் நோக்கத்தோடு இறந்து போன கொடையாளிகளுக்கு தங்கள் உடலை இறப்புக்கு முன் மருத்துவமனைகளுக்கு கொடையாக வழங்குகிறவர்களுக்கு அரசு சார்பில் இறுதி மரியாதை செலுத்தப்படும் என்று தமிழக முதல்வர் அறிவித்துள்ளார். இது பாராட்டுக்கும் வரவேற்புக்கும் உரிய முற்போக்கு சிந்தனையாகும்.

சனாதனம் என்ற பார்ப்பனியம் இறப்புக்கு பிறகு ஒரு உலகம் இருக்கிறது என்று கூறி ஊழ்வினை, கர்மவினை என்று பெயர்கள் சூட்டி சனாதன கொள்கைகளோடு அதை இணைத்து வைத்தது. வடநாடுகளில் இந்த நம்பிக்கை ஆழமாக ஊடுவிருவி நிற்கிறது. ஆனால் தமிழ்நாடு ஓரளவு பகுத்தறிவு நெறியோடு பண்படுத்தப்பட்ட மாநிலமாக பெரியார் இயக்கம் நடத்திய கருத்துப் புரட்சியால் மாற்றப்பட்டிருப்பதால் தமிழ்நாட்டில் இதற்கு கூடுதல் ஆதரவு இருக்கிறது. பக்தியிலும் சடங்குகளிலும் தீவிரமாக இயங்கும் மக்கள் கூட தங்கள் வாழ்க்கையில் இருந்து அவற்றைப் பிரித்து பார்ப்பது தான் தமிழ்நாட்டின் தனித்துவம்.

மரணத்துக்குப் பிறகு ஆன்மா மட்டும் உடலில் இருந்து பிரிந்து போய்விடும் என்றும் அது அழியாது என்றும் அந்த ஆன்மா பூமியில் நல் ஒழுக்கத்துடன் வாழ்ந்தவர்களுக்கு சொர்கத்துக்கும், தீய ஒழுக்கத்துடன் வாழ்ந்தவர்களை நரகத்துக்கும் கொண்டுபோய் சேர்க்கும் என்றும் பார்ப்பனியம் கர்ம வினை தத்துவத்தை சூழ்ச்சிகரமாக திணித்து மக்களை நம்ப வைத்தது. பகவத் கீதையில் கிருஷ்ணனும் இதையே கூறுகிறான். மானுட உடலுக்கு மரணமில்லை, அது ஆன்மாவாகி மறுபடியும் பூமியில் பிறக்கும், எனவே தர்மத்தின் எதிரிகளை கொலை செய்வது பாவமல்ல என்று போர்க் களத்தில் அறிவுரைக் கூறுகிறான். இந்த கீதையை சனாதன வாழ்க்கை முறை என்கிறார்கள் பார்ப்பனர்கள். உறுப்புக் கொடை இந்த ஆன்மா கர்மவினை மறு ஜென்மம் என்ற தத்துவங்களையே அடித்து நொறுக்குகிறது. மரணம் கடவுளின் அழைப்பு அல்ல, அறிவியலால் கடவுளின் மரண அழைப்பை தடுத்து நிறுத்தி நீண்டகாலம் வாழச் செய்ய முடியும் என்பதை மருத்துவ அறிவியல் நிருபித்திருக்கிறது. மருத்துவ விஞ்ஞானம் வளரும் போது மனிதனின் சராசரி வயதும் உயர்ந்து வருவதை கவனித்தால் இந்த உண்மை புரியும். எனவே தான் பெரியார் தனது கூட்டங்களில் கடவுள் மறுப்போடு, ஆன்மா மறு ஜென்ம மறுப்பையும் இணைத்துக்கொண்டார்.

“லோக குரு” என்றழைக்கப்பட்ட சங்கராச்சாரிகள் கூட கடவுள் அழைப்பை ஏற்று மரணத்தை தழுவ தயாராக இல்லை மாறாக மருத்துவ மனைகளுக்கே சிகிச்சைகளுக்கு சென்றார்கள், இதைவிட சனாதன ஒழிப்பு வேறு உண்டா?

இறந்து போனவர்கள் மோட்சத்தில் இருக்கிறார்கள் என்றும், அவர்கள் விரும்பிய பொருட்களை வைத்து வேத மந்திர சடங்குகளை கூறினால் தர்பைப் புல் அவற்றை மோட்சத்தில் உரியவரிடம் கொண்டு போய் சேர்க்கும் என்ற அறிவியலுக்கு எதிரான பொய்யை பார்ப்பனர்கள் பரப்பினார்கள். அந்த நம்பிக்கைகள் இப்போது பொய்த்துப் போய்விட்டன.

உடல் உறுப்புக் கொடை ஜாதி பற்றிய நம்பிக்கைகளையும் தகர்த்து வருகிறது. ஒரே ஜாதிக்கு ஒரே வகை ரத்தம் ஓடுவதில்லை, குருதியில் எட்டு வகை இப்போது கண்டறியப்பட்டுள்ளது. ஒரு பிரிவுக் குறுதி அதே பிரிவுள்ள மற்றொரு உடலுக்குத்தான் பொருந்துமே தவிர ஒரே ஜாதியில் உள்ளவருக்கு மட்டும் பொருந்தாது. ஜாதி வெறியர்கள் கூட தங்கள் குடும்ப உறுப்பினர்களுக்கு வேறு ஜாதியினரின் உறுப்பை பொருத்த வேண்டிய நிலை ஏற்பட்டால் தயக்கமின்றி ஏற்றுக் கொள்கிறார்கள். அது போலவே பெண் ஆண் என்ற பாலின வேறுபாடும் குருதிக்கு இல்லை.

கொரானா உலகையே அச்சுறுத்திய போது சனாதனிகள், பார்ப்பனர்கள் உட்பட உலகம் முழுவதும் கொரானா தடுப்பூசி எப்போது வரப்போகிறது என்று பதட்டத்துடன் காத்திருந்தார்கள். தர்மத்தை காப்பாற்ற வருவேன் என்று கூறிய கிருஷ்ண பகவான் குறித்து அவர்கள் சிந்திக்கக் கூட தயாராக இல்லை.

வேற்று கிரகங்களிலும் சந்திராயானும் விண்வெளிக் கோள்களும் தேடித்தேடி பார்த்தும் ஒரு மனிதனைக்கூட கண்டுபிடிக்கவில்லை, வானுலக தேவர்கள் எங்கே போய் மறைந்து கொண்டார்கள் என்பதற்கு சனாதனமும், பார்ப்பனியமும் தான் பதில் சொல்ல வேண்டும்.

ஒவ்வொரு மனிதரும் தனது வாழ்நாள் நீட்டிப்பையே விரும்புகிறார்கள், காசிக்கு போய் சாமியாராகி கடவுளை அடையப்போவதாக எந்த சாமியாரும் இப்போது கூறுவது இல்லை. ஈஷா மையங்களில் உல்லாச கூத்தும் சிவ தாண்டவ ஆட்டங்களும் தான் நடக்கின்றன. பதஞ்சலி பன்னாட்டு வணிகம் நடத்திக்கொண்டிருக்கிறது. நோய் நொடியின்றி நீண்டகாலம் உயிர்வாழ மோட்சம் போகாமல் தடுக்கும் மருந்துகள் எங்களிடம் இருக்கிறது என்று விளம்பரம் செய்கிறது. இப்படி சந்தி சிரிக்கும் சனதனத்தை உதயநிதி ஸ்டாலின் சுட்டிக்காட்டினால் தலைக்கு விலை வைக்கிறார்கள். இன்று தமிழ்நாட்டில் கல்வி, மருத்துவம், பெண்ணுரிமை, தொழில் வளர்ச்சி போன்ற அடிப்படை உரிமைகளுக்காக முன்வைக்கும் ஒவ்வொரு திட்டங்களுக்குமே சனாதன எதிர்ப்பு தான். அந்த எதிர்ப்பில் மற்றொரு மகுடம் சூட்டியிருக்கிறது இந்த அரசு மரியாதை எனும் அறிவிப்பு.

# சனாதன பூஜ்ஜியம்

**‘டாடி’ நான் எம்.டி நுழைவுத் தேர்வில் பூஜ்ஜியம் மார்க் வாங்கி விட்டேன், உங்கள் கனவை நினைவாக்கிவிட்டேன். என்னை வாழ்த்துங்கள் டாடி என்று உளம் பூரிக்க அலைபேசியில் பேசினான் மகன்.**

**அப்பாடா, என் வயிற்றில் பால் வார்த்துவிட்டாயடா. மகனே உனக்காக லட்ச லட்சமாய் செலவு செய்து கோச்சிங் வகுப்புகளுக்கு நான் அனுப்பி வெச்சது வீண் போகவில்லை. பூஜ்ஜியம் வாங்கி சாதித்து விட்டாய், கடவுளுக்குத்தான் நன்றி சொல்லவேண்டும் என்று நிம்மதி பெருமூச்சு விட்டார் டாடி**

**பூஜ்ஜியத்தின் மதிப்பதைக் கண்டறிய பல கணித மேதைகள் ஏராளமான ஆராய்ச்சிகளை செய்துள்ளனர், ஆனால் அதற்கான விடை நமது முன்னோர்கள் உருவாக்கிய சனாதனத்தில் இருக்கிறது என்ற உண்மை இந்த சயின்ஸ் படித்த மர மண்டைகளுக்கு ஏனோ புரியவில்லை.**

**பூஜ்ஜியம் நமது சனாதன தர்மத்திலேயே இருந்திருக்கிறது. அதுதான் நமது பண்பாடு, அதுதான் நமது வாழ்க்கை முறை என்றார் ஒரு சனாதன பார்ப்பனர். ஆமாம் ஆமாம் நீங்கள் சொல்வது தான் வேத வாக்கு என்று பின்பாட்டு பாடுகிறது அனுமார் படை.**

**அது எப்படி அந்த காலத்தில் இருந்தது என்பது தெரியுமோ, நன்னா கேட்டுக்கோங்க, பிராமணரல்லாத சூத்திர பஞ்சம பசங்கள பள்ளிக்கூடமே போகக் கூடாதுன்னு தடுத்து நிறுத்தினாளே ஏன் தெரியுமா? பள்ளிக்கூடம் போனாதானே அவன் பரிட்சை எழுதுவான், பரிட்சை எழுதுனாதானே பூஜ்ஜியம் மார்க்கை எட்ட முடியும், நாங்கள் அப்போதே பூஜ்ஜியத்துக்கு செய்துட்டோம், இதுதான் எங்கள் சனாதனத்தின் பூஜ்ஜிய ரகசியம் என்று பூரிப்புடன் கூறி பூநூலை இழுத்துவிட்டுக் கொண்டார் வேதப் பார்ப்பனர்.**

**சரிங்கோ மாமா, அப்போ பள்ளிக்கூடத்துக்கு போக விடாம பூஜ்ஜியம் போட்டிங்க, இப்போ நீட் தேர்வு எழுதினால் தான் பூஜ்ஜியம் கிடைக்கும்னு சொல்றிங்க, இது என்ன மாமா நியாயம் என்று கேட்டான் அந்த மாணவன்.**

**அம்பி… அது அன்றைய சனாதனம், இது இன்றைய சனாதனம். அந்த காலத்துல எவனும் சனாதனத்த மீறல, இப்போ கீழ்ஜாதிக்காரனுங்க படிக்க வந்துட்டானுங்க. போதாக்குறைக்கு இந்த பெண்டுகளும் வந்துட்டாளுங்க, இப்படி சனாதனத்த மீறுகிற போது நாங்க என்ன செய்யுறது, வேறு வழியில்லாம நீட்,நெக்ஸ்ட், மற்றொரு நீட் என்று பரிட்சை சுமைகளை முதுகில் ஏத்தி இந்த பசங்களின் படிப்புக்கு முழுக்கு போட வெச்சுட்டா எங்க சனாதனம் ஜெய்ச்சுருமில்ல. இந்த தனியார் மெடிக்கல் காலேஜ் காரனெல்லாம் கட் ஆஃப் மார்க் இருக்குற காரணத்தால மாணவர்கள் இல்லாம திண்டாடுறான். கல்லா கட்ட முடியவில்லை, அவா மட்டுமா கோச்சிங் வகுப்பு நடத்துறவனும் கீழ் சாதிக்காரன் படிக்க வந்தா தான் துட்டடிக்க முடியும். அதனால் தான் தேர்வையும் வைத்து பூஜ்ஜியத்தையும் பாஸ் செய்ய வைக்கிறோம். நாங்களெல்லாம் வித்தியாசமான ஆளுங்கடா, நாங்கெல்லாம் பூஜ்ஜியத்தையே புரட்டிப்போட்டு அதுக்கு சனாதனம்னு பேரு வெச்சிருக்கோம் தெரியுமோ” என்றார் அந்த வேதப் பார்ப்பனர். அப்படியா மாமா இனி பூஜ்ஜியத்துக்கும் கோயில் கட்டுவிங்க, பூஜ்ஜிய சரஸ்வதி என்று பெயர் சூட்டுவிங்க,அதுக்கு பூஜை நடத்த ஆகமத்த தூக்கிகிட்டு வந்துருவிங்க, அடேங்கப்பா..! உங்களுக்கு சனாதனம் என்பது சர்வ ரோக நிவாரணி.**

கோடங்குடி மாரிமுத்து

# உபியில் சனாதன ஆட்சி இதுதான்

*சனாதனம் என்ற பார்ப்பனிய வாழ்க்கைமுறையை அரசு அதிகாரத்துடன் வருகிறது உபி பாஜக அரசு.*

- *கடந்த செப்டம்பர் 17ம் தேதி பெரியார் பிறந்தநாள் விழா நடத்திய 5 தோழர்களை கூட்டத்துக்கு தடை விதித்து கைது செய்துள்ளது சிறையிலடைத்துள்ளது உபி பாஜக அரசு.*

- *அதே நேரத்தில் பூச்சாண்டி குண்டர் சாமியார் பூணூலைப் போட்டுக் கொண்டு கையில் நீண்ட கொடுவாளை ஏந்தி உதயநிதி ஸ்டாலின் படத்தை தலையில் குத்தி பிறகு நெருப்பில் போட்டு எரித்து காலால் மிதிக்கும் காட்சி சமூக ஊடகங்களில் பரவலானது. உதயநிதி தலைக்கு 15 கோடி விலை நிர்ணியித்தார் அந்த பார்ப்பன குண்டர் இப்போது சுதந்திரத்துடன் திரிகிறார்.*
- *இதே உபி மாநிலத்தில் முசாபர் நகர் பகுதியில் ஒரு பள்ளி ஆசிரியை வீட்டுப்பாடம் எழுதாத 7 வயது முஸ்லிம் சிறுவனை நிற்கவைத்து பிற மாணவர்களை விட்டு கன்னத்தில் அறையவைத்திருக்கிறார். இந்த கொடூர காட்சி சமூகவலைதளங்களில் பரவலானது. வேறுவழியின்றி முசாபர் நகர் காவல்துறை நீண்ட இடைவெளிக்குப் பிறகு முதல் தகவல் அறிக்கையை தாக்கல் செய்தது. கண் துடைப்புக்காக போடப்பட்ட இந்த வழக்கை எதிர்த்து குடும்பத்தினர் உச்சநீதிமன்றம் போனார்கள். உச்ச நீதிமன்றம் உபியில் சனாதன ஆட்சி நடத்தும் மாநில ஆட்சியை கடுமையாக கண்டித்துள்ளது. பள்ளி ஆசிரியை சிறுவனின் மதம் குறித்து அவனது தந்தையிடம் கூறிய வசை சொற்களை முதல் தகவல் அறிக்கையில் பதிவு செய்யப்பட வில்லை. அரசின் கூடுதல் சொலி சிட்டர் ஜெனரல் கூறுகையில் ;- இதில் தேவையில்லாமல் மதப் பிரச்சனையை கொண்டு வருகிறார்கள் என்று முன் வைத்த வாதத்தை கடுமையாக கண்டித்த நீதிபதிகள் இது கடுமையான பிரச்சனை, வீடியோ ஆதாரமே இருக்கிறது, வேறொரு மதத்தைச் சார்ந்தவர் என்பதற்காகவே ஒரு ஆசிரியை சக மாணவர்களைக் கொண்டு தாக்க செய்கிறார்கள் என்றால் அம்மாநிலத்தின் கல்வித்தரம் தாழ்ந்து போய் இருக்கிறது என்று அர்த்தம் என்று நீதிபதி சுட்டிக்காட்டியிருக்கிறார். இதுதான் உபியில் சனாதன ஆட்சி, அதுவும் ராமனுக்கு வீடுகட்டி குடியேற்றச் செய்யும் மாநிலம்*

## ரவிக்குமாரின் அடுக்கடுக்கான பொய்கள்

# கீழ் வெண்மணி : நடந்தது என்ன?

**கொளத்தூர் மணி**

பூவிழியன் எழுதிய “கே.பி.எஸ்.மணி: ஒரு போராளியின் வரலாறு” என்ற நூல், “இந்தத் தொழிலெல்லாம் தாழ்த்தப்பட்ட மக்கள் செய்யக்கூடாதுன்னா, அப்புறம் யார் தான் செய்யறது?” எனப் பெரியார் கேட்டார். அதற்குப் பதில் சொல்ல விரும்பாத கே.பி.எஸ்.மணி அன்றைய தினத்தில் இருந்து பெரியாரின் உறவையும் அவரது கொள்கைகளையும் விட்டு விலகினார் என தானே விலகிக் கொண்டதாக கூறுகிறது.

ஆனால் ‘தலித்’ ஏட்டில் வெளியான நேர்காணலில் இளையபெருமாள் “தன்னை எதிர்த்துப் பேசியது பிடிக்காமல் அவரைப் பெரியார் கட்சியை விட்டு நீக்கி விட்டார்” என்கிறது.

கே.பி.எஸ்.மணியின் வாழ்க்கை வரலாற்று நூல் கூறுவது போல திராவிடர் கழகத்தை விட்டு, ஏன், பெரியாரது கொள்கைகளையும் விட்டுவிட்டு, தானே விலகினார் என்பது உண்மையா? ‘தலித்’ ஏட்டுக்கான நேர்காணலில் இளையபெருமாள் கூறியிருப்பதைப் போல எதிர்த்துப் பேசியது பிடிக்காமல் பெரியார் விலக்கி விட்டார் என்பது உண்மையா? அல்லது இரண்டுமே பொய்யா?

1946 நவம்பரில் பெரியார் உரையாற்றி முடித்தவுடன் பறைகளை எரிக்கும் நோக்கத்தில் தோழர்கள் 100 பேர் திடீரென வர, ஏற்பட்ட பரபரப்பை பெரியார் அமைதியாய் இருக்கும்படி வேண்டி, அமைதி ஏற்பட்டவுடன் பறைகள் எரிக்கப்பட்டன.

1946 டிசம்பரில் ‘குடிஅரசு’ ஏட்டில் பறைகளை எரித்து எதிர்ப்பினை வெளிப்படுத்த ஊக்குவிக்குமாறும், திராவிடர் கழகத் தோழர்கள் அந்நிகழ்விற்கு ஒத்துழைப்பையும் ஆதரவையும் தருமாறும் வேண்டி அறிக்கை வெளியிட்ட அதே பெரியார் 1948 இல் உங்கள் சாதி பறை அடிக்காவிட்டால் யார் அடிப்பார்கள் என்று வினவியதாக ‘இளையபெருமாள், கே.பி.எஸ்.மணி’ ஆகியோரின் வரலாற்று நூல்கள் கூறுகின்றன.

**புதிய வரலாறு படைப்போம்! புதிய வரலாறு படைப்போம்! என்கிறார்களே, இவ்வாறான ‘புதிய, புதிய’ வரலாறுகள் எழுதுவதுதான் புதிய வரலாறு படைப்பதோ!**

### ரவிக்குமாரின் அடுத்தப் பொய்

அடுத்து, ரவிக்குமார் எழுதிய “எல். இளையபெருமாள் வாழ்வும் பணியும்” என்ற நூலில் “கீழ்வெண்மணி படுகொலை” என்ற தலைப்பில் ஒரு கட்டுரை

“அந்த கொலையிலே (கீழ்வெண்மணி) குற்றவாளிகளை (கோபாலகிருஷ்ணன் நாயுடு உள்ளிட்ட 23 பேர்) தமிழக அரசு விடுதலை செய்தது வேதனையான செய்தி. ஆனால் எமர்ஜென்சி வந்தபோதும், நான் 1980ஆம் ஆண்டு காங்கிரஸ் கட்சித் தலைவராக வந்த போதும் அந்த வழக்கை மீண்டும் தொடரச் செய்து குற்றவாளிகள் சிலருக்குத் தண்டனை வாங்கித் தந்தோம்” என்கிறது கட்டுரை

கீழத் தஞ்சையில் (இன்றைய நாகை, திருவாரூர் மாவட்டங்கள்) உள்ள கீழ்வெண்மணி என்ற கிராமத்தில் சட்டவிரோதக் கும்பலின் வன்முறை அச்சத்தால் ராமையா என்பவர் குடிசையில் ஒளிந்திருந்த 44 பேர் (பெண்கள், முதியவர்கள் உட்பட) குடிசைக்குள் கருகி உயிரிழந்தனர். (25.12.1968) அன்று இரவு பத்து மணி அளவில் குடிசைக்கு பண்ணையார்கள் தரப்பினால் தீ வைக்கப்பட்டது. எதிர்ப்பட்ட ஆண் தொழிலாளர்கள் துப்பாக்கியால் சுடப்பட்டனர்.



சிலருக்கு அரிவாள் வெட்டும், சுளுக்கி மற்றும் தடியினால் பலத்த காயங்களும் ஏற்பட்டன. குண்டடிபட்ட முனியன் (முதல் சாட்சி) தனது புகாரில் தாக்க வந்த கூட்டத்தில் கோபால கிருஷ்ணன் நாயுடுவும் இருந்ததைக் குறிப்பிட்டு கூறியிருக்கிறார். இந்த கலவரத்தில் வெளியூரில் இருந்து அறுவடைக்காக கூட்டி வரப்பட்ட கூலித் தொழிலாளி பக்கிரிசாமியும் கொல்லப்பட்டார்.

44 பேர் மரணத்திற்காக கோபாலகிருஷ்ணன் நாயுடு மீதும் அவரது நெருங்கிய உறவினர்கள் மீதும் கொலைக்காக இ.பி.கோ 302இன் கீழும், ஆயுத சட்டத்தின் கீழும் வழக்கு பதிவு செய்யப்படுகிறது. (முதல் தகவல் அறிக்கை எண்: 327/68)

கலவரத்தில் இறந்து போன பக்கிரிசாமி மரணத்தை கொலை வழக்குக்காக கீவளூர் காவல் நிலையம், முதல் தகவல் அறிக்கை 328/1968 ஆகப் பதிவு செய்தது. இந்த வழக்கிலும் கோபால், ராமையன் உட்பட 23 பேர் மீது வழக்கு.

இரு வழக்குகளுக்கும் ஆன தீர்ப்பினை மாவட்ட அமர்வு நீதிமன்றம் 30.11.1970 அன்று கூறியது. நீதிபதி சி.எம்.குப்பண்ணன், பக்கிரிசாமி கொலை வழக்கில் முதல் குற்றவாளி கோபாலுக்கு ஆயுள் தண்டனையும், இரண்டாவது குற்றவாளி ராமையனுக்கு 5 வருடமும், நான்கு பேருக்கு இரண்டு வருடமும் சிறை தண்டனை வழங்கினார். 8 பேர் விடுதலை செய்யப்பட்டார்கள்.

கே.பி.எஸ். மணியின் வாழ்க்கை வரலாற்று நூல் கூறுவது போல திராவிடர் கழகத்தை விட்டு, ஏன், பெரியாரது கொள்கைகளையும் விட்டுவிட்டு, தானே விலகினார் என்பது உண்மையா? ‘தலித்’ ஏட்டுக்கான நேர்காணலில் இளையபெருமாள் கூறியிருப்பதைப் போல எதிர்த்துப் பேசியது பிடிக்காமல் பெரியார் விலக்கி விட்டார் என்பது உண்மையா? அல்லது இரண்டுமே பொய்யா?

ஆனால் கீழ்வெண்மணி 44 பேர் எரித்த வழக்கில் கோபாலகிருஷ்ண நாயுடுவுக்கும் மேலும் எட்டு பேர்களுக்கும் 10 ஆண்டுகள் கடுங்காவல் சிறை தண்டனை விதிக்கப்பட்டது. சட்ட விரோதமாகக் கூடி சட்டத்துக்கு புறம்பான காரியங்களை செய்ததற்காகவும், தீயிட்டு அழித்ததற்காகவும் அந்த தண்டனை அளிக்கப்பட்டது. கொலை முயற்சியில் ஈடுபட்டதற்காக அதில் 5 பேருக்கு 7 ஆண்டுகள் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டதே ஒழிய கொலைக் குற்றச்சாட்டில் இருந்து அனைவரும் விடுவிக்கப்பட்டனர்.

முதல் வழக்கில் தண்டிக்கப்பட்டோரில் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட கோபாலும், 5 வருட தண்டனை விதிக்கப்பட்ட ராமையனும் (Crl. A. no.23/1971) உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தனர்.

கோபாலகிருஷ்ண நாயுடு தரப்பாரும் உயர்நீதிமன்றத்தில் மேல் முறையீடு (Crl.A.No.1208/1970) செய்தனர்.

முதலில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட வழக்கில் உயர்நீதிமன்றம் கோபால், ராமையன் இருவருக்கும் 4.8.1972 அன்று தண்டனையை உறுதி செய்து தீர்ப்பளித்தது. அவர்களுக்காக இடதுசாரி வழக்கறிஞரான ஆர்.கே கார்க் உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தார். 13 ஆண்டுகளுக்குப் பிறகு உச்ச நீதிமன்றம் 30.1.1986 அன்று முறையீட்டைத் தள்ளுபடி செய்தது.

கீழ்வெண்மணி கொலை வழக்கில் மேல்முறையீட்டை 1973இல் விசாரித்த உயர் நீதிமன்ற நீதிபதிகள் (வெங்கட்ராமன் ஐ.சி.எஸ் மற்றும் மகாராஜன்) கோபாலகிருஷ்ண நாயுடுவும் மற்ற குற்றவாளிகளும் தாக்கல் செய்திருந்த மேல்முறையீட்டை ஏற்றுக்கொண்டு அவர்களுக்கு மாவட்ட நீதிமன்றம் விதித்த தண்டனையை ரத்து செய்தது. அதனை எதிர்த்து திமுக அரசு 1975 ஆம் ஆண்டு உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தது. திமுக ஆட்சி 1976 ஜனவரி இறுதியில் கலைக்கப்பட்டது. மேல்முறையீடு நிலுவையில் இருக்கும் போதே கோபாலகிருஷ்ண நாயுடு 14.12.1980 அன்று அவரது இரிஞ்சூர் கிராமத்திலேயே கொலை செய்யப்பட்டார். மேல்முறையீடு 31.10.1990 அன்றே விசாரணைக்கு வந்தது. விசாரணையின் முடிவில் உச்ச நீதிமன்றத்தின் சிறப்பு மேல்முறையீட்டு அதிகாரத்தின் கீழ் இவ்வழக்கில் தலையிட விரும்பவில்லை என்று கூறி முறையீட்டை தள்ளுபடி செய்து விட்டது. (தகவல்கள் : நீதிபதி சந்துரு அவர்கள், உரிமைத் தமிழ்த்தேசம் டிசம்பர் 2020 இதழில் “கீழ்வெண்மணி - குடை சாய்ந்த நீதி” என்ற தலைப்பில் எழுதியுள்ள கட்டுரை)

இளையபெருமாள் அவர்களோ உயர் நீதிமன்றம் தண்டனையை ரத்து செய்ததை “தமிழக அரசு விடுதலை செய்தது வேதனையான செய்தி” என்கிறார்.

உயர்நீதிமன்றத்தில் குற்றவாளிகள் அனைவருக்கும் விடுதலை வழங்கிய தீர்ப்பினை எதிர்த்து திமுக அரசு செய்த மேல்முறையீட்டை 15 ஆண்டுகள் கழித்து 1990இல் தள்ளுபடி செய்துவிட்டது. ஆனால் இளையபெருமாள் அவர்களோ எமர்ஜென்சி வந்தபோதும், 1980இல் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவராக வந்த போதும் அந்த வழக்கை மீண்டும் தொடரச் செய்து சிலருக்குத் தண்டனை பெற்றுத் தந்தோம்” என்று பெருமையுடன் கூறிக் கொள்கிறார்.

இதே இளையபெருமாள் அவர்கள்தான் பெரியார் மீது ஆதாரம் இல்லாத குற்றச்சாட்டுகளை, அவ்வப்போதுவெவ்வேறுவகையாகசொல்லியுள்ளார் என்பதையும் இணைத்துப் பார்த்தாலே அவரின் கூற்றுகளின் உண்மைத் தன்மையை உணர்ந்திட முடியும்.

*தொடரும்*

## வினா விடை

• *எடப்பாடி அணி பட்டாசு வெடித்து கொண்டாட்டம் - செய்தி*
**அதெல்லாம் இல்லை, குண்டு வைத்த பயங்கரவாதிகள் என்று கூறி வழக்கு போட்டு உள்ளே தள்ளுங்க மோடி ஜீ**

• *புதிய நாடாளுமன்றத்தில் பாஜக எம்பி முஸ்லிம் எம்பியை பார்த்து ஆபாசப் பேச்சு - செய்தி*
**அப்படி எல்லாம் பேசியிருக்க மாட்டார், எதாவது புராணக் கதை கூறியிருப்பார்.**

• *விநாயகர் சிலை தண்ணீரில் கரையாமல் கரைக்கு திரும்பியது - செய்தி*
**பாவம் பக்தர்கள் சித்தரவதையை எவ்வளவு தான் தாங்க முடியும்.**

• *என் பேச்சுக்கு மன்னிப்பு கோருகிறேன், என்னை விடுதலை செய்யுங்கள் - ஏபிவிபி மணியன்*
**சட்டம் தான் காப்பாற்றும், சனாதனம் ஓடிவராது என்பதை இப்போதாவது புரிந்துகொண்டீர்களா?**

**புரட்சிப் பெரியார் முழக்கம்**

ஆண்டுக் கட்டணம் - ரூ.300/-
5 ஆண்டுக் கட்டணம் - ரூ.1400

தொடர்புக்கு :
ஆசிரியர், தோழமை எண் :
15,வெங்கடேஸ்வரா நகர், பெருங்குடி,
சென்னை - 96
பேச : 8973341377

date of publication - every thursday tamil weekly Reg.No.tn/cc(S)Dn/459/22-24 licenced to post wpp no.tn/PMG(ccR)/WPP-462/22-24
puratchi periyar muzhakkam registered with the registrar of newspaper for india under no.tntam/2002/07776

## TRIBES யூடியூப் தளத்திற்கு மருதையன் அளித்த நேர்காணல்

# இட ஒதுக்கீட்டுக் கொள்கையில் ஆர்.எஸ்.எஸ் முரண்பாடுகள்

இட ஒதுக்கீட்டுக் கொள்கையில் ஆர்.எஸ்.எஸ் தடுமாற்றத்தை விளக்குகிறார் தோழர் மருதையன்

**நெறியாளர்** : *கடந்த காலங்களில் ஆர்.எஸ்.எஸ் எப்போவாவது இட ஒதுக்கீட்டிற்கு ஆதரவாக கருத்து தெரிவித்திருக்கிறார்களா? இப்போது ஆர்.எஸ்.எஸ் தலைவரே இட ஒதுக்கீட்டிற்கு ஆதரவு தெரிவித்திருக்கிறார் என்ற போது காலம் மாறிக்கொண்டுள்ளது, ஓபிசி,எஸ்.சி, எஸ்.டி மக்கள் மத்தியில் தங்களுக்கான அரசியல் சமூக உரிமைகளுக்கான விழிப்புணர்வு அதிகமாகி விட்டது. அதனால் காலத்திற்கு ஏற்றவாறு ஒரு அரசியலை ஆர்.எஸ்.எஸ் முன்னெடுக்கிறார்கள் என்ற வாதம் வைக்கப்படுகிறது. அது சரிதானா?*

**மருதையன்** : வாதம் வைப்பவர்கள் கொஞ்சம் யோசித்துப் பார்க்க வேண்டும். இப்போது பிற்படுத்தப்பட்டவர்கள் ஆர்.எஸ்.எஸ்-யை பற்றி, சனாதனத்தை பற்றி, பார்ப்பன கொடுங்கோன்மையைப் பற்றி மேலும் தெளிவு பெற்று விட்டார்கள். அதனால் தான் மோகன் பகவத் பின் வாங்குகிறார் என்பது அவர்களின் வாதம் என்றால் பொருளாதார இட ஒதுக்கீட்டுக்கு எதிராக தமிழ்நாடு தவிர இந்தியாவில் எங்கே எதிர்ப்பு வந்தது என்பதை அவர்கள் சொல்ல வேண்டும். ஏன் வரவில்லை? ஏன் சிபிஎம் உள்ளிட்ட கட்சிகள் பொருளாதார இட ஒதுக்கீட்டுக்கு ஆதரவாக இருந்தனர்? அப்போது அந்தக் கட்சிகள் அப்படி இருக்கிறார்கள் என்பது மட்டும் முக்கியமில்லை, இந்தியா முழுவதும் உள்ள பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட சமூகத்தினர் மத்தியில் பொருளாதார இட ஒதுக்கீடு என்பது இட ஒதுக்கீட்டின் அடித்தளத்தையே அசைக்க கூடிய ஒரு நிலைப்பாடு. இட ஒதுக்கீட்டு முறையை ஒழிக்கக் கூடியது என்பதை அவர்கள் புரிந்து கொண்டிருக்கிறார்களா? புரிந்துகொள்ளவில்லை என்பது ஒன்று.

இரண்டாவது, விஸ்வகர்மா சம்வான் அபியான் என்ற புதிய திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளனர். அது குலத் தொழிலை புதுப்பிப்பதற்கான ஒரு சதி. சேவை சாதிகள், சூத்திர சாதிகளை சேர்ந்த ஒடுக்கப்பட்ட மக்கள் கல்விப் பெற்று நவீன தொழில்களுக்கு செல்லாமல் பாரம்பரிய தொழில் என்ற பெயரில் அதிலேயே முடக்கி வைப்பதற்காக அன்றைக்கு ராஜாஜி செய்த காரியத்தை இன்று மோடி அரசு செய்கிறது. இதை தமிழ்நாட்டில் மட்டும்தான் பேசுகிறோம். வேறு எங்கும் பேசவில்லை. அங்கு இது போன்ற விழிப்புணர்வு அந்த மக்களுக்கோ, கட்சிகளுக்கோ இருக்கிறதா என்றால் அப்படி இல்லை. அதனால் இந்தியா முழுவதும் விழிப்புணர்வு பெற்றுவிட்டார்கள் என்று சொல்பவர்கள், இன்றைக்கு அவர்கள் சொல்வது உண்மையானால் உதயநிதி ஸ்டாலின் பேசியதில் என்ன தவறு? சனாதன தர்மம் தானே எங்களை 2000 வருடங்கள் ஒடுக்கியது, என்ன பிரச்சனை இப்போ என்று கேட்டிருக்க வேண்டும். அப்படி ஒரு கேள்வியை மல்லிகார்ஜுன கார்கேவின் மகன் மட்டும் தான் கேட்டுள்ளார். மற்றவர்களெல்லாம் உறுதியாக பேசவில்லை. தமிழ்நாட்டில் ஆ.இராசா பேசி உள்ளார். இதுதான் நிலவரம்.

இதில் வேடிக்கை என்னவென்று கேட்டால் பகவத் இட ஒதுக்கீடு கொடுக்க வேண்டும் என்று பேசும்போது இட ஒதுக்கீடு கொடுப்பது என்பது பொருளாதார சலுகை அல்ல; அது சுயமரியாதை பிரச்சனை என்கிறார். சமூக ரீதியான ஒடுக்குமுறைக்கு எதிரானது. இன்னும் கொஞ்சம் விட்டால் கூட புரட்சியே செய்துவிடுவார் போல.

நாம் ஒடுக்கப்பட்ட சாதிகளோடு ஒப்பிடப்பட வேண்டுமென்றால் ஆர்.எஸ்.எஸ் சுயம் சேவக்-கள் பசு மாமிசமும் சாப்பிட தயாராக இருக்க வேண்டும். அதற்கு ஒரு கதை எல்லாம் சொல்கிறார். எங்கோ ஒரு இடத்தில் தலித் மக்களுடன் ஐக்கியப்பட செல்லும்போது அவர்கள் மாட்டு கறி சாப்பிட வேண்டும் என்று சொன்னார்களாம், இவர்களும் சாப்பிட்டார்களாம். சாப்பிட்ட பிறகு உங்களை சோதிப்பதற்காக தான் இதை செய்தோம், மாட்டுக்கறி இல்லை என்று அந்த தாழ்த்தப்பட்டவர் சொன்னார். அதனால் மாட்டுக்கறி சாப்பிடுவதற்கும் நாம் தயாராக இருக்க வேண்டும். இந்த பேச்சை வைத்துக் கொண்டு அவர்களை நம்புவதற்கு நாம் அவ்வளவு ஏமாளிகளாக இருக்கிறோமா என்பது தான் கேள்வி? அதாவது இரட்டை நாக்கு என்பது ‘பேச நா இரண்டுடையா போற்றி!’ என்று அண்ணா எழுதியிருக்கிறார். இரட்டை நாக்கு என்பது அவர்களுடைய பிறவி குணம்.

பாபர் மசூதி இடிக்கும் வரைக்கும் உச்சநீதிமன்றத்தில் நாங்கள் எதுவும் செய்யப் போவதில்லை, அங்கு பஜனை செய்யப் போகிறோம் என்று தான் அனுமதி வாங்கினார்கள். மறுநாள் மசூதியை இடித்தார்கள். அவர்கள் சொல்வதற்கும் செய்வதற்கும் என்றைக்கும் நேர்மை என்பதே கிடையாது. அந்தக் கோணத்தில் நாம் புரிந்து கொள்ள வேண்டும். இட ஒதுக்கீடு பற்றிய அவர்களின் கடந்த கால நிலைப்பாடுகளை கொஞ்சம் நிதானமாக வரலாற்றை புரட்டிப் பார்த்தால் அவர்களை புரிந்து கொள்ள முடியும்.

**நெறியாளர்** : *எல்லாருக்கும் 10 வருடங்களுக்கு முன்பு ஒரு கருத்து இருக்கிறது. இன்றைக்கு அந்த கருத்து மாறுபடுகிறது. அப்படி ஆர்எஸ்எஸ்க்கு கருத்து மாறாதா? மாற்றத்தை அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள் என்று சொல்ல முடியாதா? ஆர்எஸ்எஸ் கடந்த கால நிலைப்பாடுகளை வைத்து ஆர்.எஸ்.எஸ் தலைவர் இன்றைக்கு பேசியதை மதிப்பீடு செய்ய வேண்டுமா?*

**மருதையன்** : ஆர்.எஸ்.எஸ் என்ற இயக்கம் ஒரு நோக்கத்திற்காக தொடங்கப்பட்டது. அது என்ன நோக்கத்திற்காக உருவாக்கப்பட்டது. ஹிந்துராஷ்டிராவை அமைக்க வேண்டும் என்ற நோக்கத்துக்காக உருவாக்கப்பட்டது. இதைப் பற்றி ஹெட்கேவார், கோல்வாக்கர், சாவர்க்கர் இத்தனை பேரும் பேசி இருக்கிறார்கள். அவர்களுக்கு பின்னால் தீன் தயாள் உபாத்தியாயா ஜன சங்கத்தை தொடங்கியவர் அவர். அவர் *Integrel Humanism* என்ற புத்தகத்தை எழுதியிருக்கிறார். அந்த புத்தகத்தில் அவர் குறிப்பிடுவது “நமது நோக்கம் தூய வடிவிலான வர்ணாசிரம தர்மத்தை புதுப்பித்து நிலைநாட்டுவது தான்” இது 1965இல் ஜன சங்கத்தின் நோக்கம் என்று எழுதியிருக்கிறார். இந்த கொள்கைகளை எல்லாம் அவர்கள் விட்டுவிட்டு தலைகீழாக மாறிவிட்டார்கள் என்றால் ஆர்.எஸ்.எஸ்-யை கலைத்து விடலாம். ஒரு கட்சி தான் உருவாக்கப்பட்ட நோக்கத்திற்கு எதிராக ஒருபோதும் வேலை செய்யாது.

அன்றைக்கு வெள்ளைக்காரன் ஆண்டபோது தேசிய விடுதலை இயக்கத்திற்கு எதிராக பிரிட்டிஷ் காரனோடு கூட்டு சேர்ந்து கொண்டார்கள். இரண்டாவது இந்திய அரசியலமைப்புச் சட்டம் வந்தபோது *Organaizer* பத்திரிகையில் “இதில் பாரதியம் என்று எதுவும் இல்லை, நமக்காக மனுதர்மம் இருக்கும்போது அதை அங்கீகரிக்காமல் இப்படி ஒரு அரசியல் சட்டமா? என்று எழுதினார்கள். *Hindu Code Bill* -யை அம்பேத்கர் கொண்டு வந்த போது அதை மிகக் கடுமையாக எதிர்த்தார்கள்.

இந்தியாவிலேயே முதல்முறையாக இட ஒதுக்கீட்டுக்கு எதிராக கலவரம் நடந்த ஊர் குஜராத். 1981இல் நரேந்திரமோடி ஆர்.எஸ்.எஸ் பிரச்சாரகராக இருக்கும் போது தாழ்த்தப்பட்டோருக்கான இட ஒதுக்கீட்டுக்கு எதிராக மிகப்பெரிய கலகம் நடக்கிறது. அப்போது ஆர் எஸ் எஸ் ஒரு அறிக்கை விடுகிறது, கற்றறிந்த சான்றோரை வைத்து இந்த தலித்களுக்கும், பழங்குடிகளுக்கும் இட ஒதுக்கீடு தொடர வேண்டுமா என்பது குறித்து நடுநிலையான அத்தகைய சான்றோர்கள் தயவு செய்து தீர்ப்பு கூற வேண்டும். இது 1981 ஆர்.எஸ்.எஸின் நிலைப்பாடு.

1985இல் இட ஒதுக்கீடு இனிமேலும் நீடிக்க முடியாது, கேலிக்கூத்தாகிவிட்டது, இதை முடிவிற்கு கொண்டு வர வேண்டும் என்றது.

1990களில் மண்டல் கமிஷன் வருகிறது. விபி.சிங் ஆட்சி கவிழ்க்கப்படுகிறது. இவர்கள் தான் கவிழ்த்தனர். இதை முறியடிக்கத் தான் பாபர் மசூதி- ராமஜென்ம பூமி பிரச்சனையை கையில் எடுத்து ரத யாத்திரையை நடத்தினார்கள்.

2006 இல் UPA அரசு ஐஐடி, ஐஐஎம்-களில் மண்டல் கமிஷன் பரிந்துரைப்படி இட ஒதுக்கீடு என்பதை கொண்டு வருகிறார்கள். அப்போது 2006 ஜுன் மாதத்தில் “ஆரம்பக் கல்வி மட்டும் தான் உரிமையாக இருக்க வேண்டும், அதற்கு மேல் படிப்பது என்றால் அவரவர் தகுதியிலிருந்து வரவேண்டும். இந்த நாட்டினுடைய சிறந்த கல்வி நிறுவனத் தகுதி என்பதை தனக்காக வைத்திருப்பது ஐஐடி, ஐஐஎம் அதையே நாசமாக்குவதற்கு UPA அரசு இறங்கியுள்ளது என்று தனது *Organaizer* எழுதியுள்ளது.

2015ல் குஜராத்தில் படேல் சாதியினர் இட ஒதுக்கீடு கோரி போராட்டம் நடத்தினார்கள். அப்போது அதை சமாளிப்பதற்காக மோகன் பகவத், இட ஒதுக்கீடு பிரச்சனை எல்லாம் நீண்ட நாள் நீடிக்க முடியாது இதை ஒரு முடிவுக்கு கொண்டு வந்தாக வேண்டும் என்று பேசுகிறார். கெடுவாய்ப்பாக அப்போது பீகார் தேர்தல் வருகிறது. அதனால் உடனடியாக மோடி, யார் சொன்னாலும் இட ஒதுக்கீட்டை ஒழிக்க முடியாது, யாரும் அதைப்பற்றி கவலைப்பட வேண்டாம் என்று பேசினார். அதன் பிறகு இட ஒதுக்கீட்டை எப்படி ஒழிக்கிறார்கள் என்றால் பொருளாதார ரீதியான இட ஒதுக்கீட்டை கொண்டு வந்து ஒழிக்கிறார்கள். 10% EWS, எதன் அடிப்படையில், வருமான வரம்பு 8 இலட்சம் என்று அயோக்கியத்தனமாக வைத்து EWS நிறைவேற்றப்படுகிறது. EWS பற்றி ஆர் எஸ் எஸ் நிலைப்பாடு என்ன? இதை மூர்க்கமாக ஆதரிக்கிறது, இதுதான் ஆர்.எஸ்.எஸின் நிலைப்பாடு.

சமூக ரீதியாகவும், கல்வி ரீதியாகவும் பின் தங்கியவர்கள், ஒடுக்கப்பட்டவர்கள் என்ற அடிப்படையில் தான் பிற்படுத்தப்பட்டவர்களுக்கான இட ஒதுக்கீடு. அதை பொருளாதார அடிப்படையாக்கி தகர்த்து விடுகிறார்கள்.

இப்போது சென்சஸ் எடுக்கவில்லை. ஏனென்றால் சாதி ரீதியான கணக்கெடுப்பு எடுத்தால் ஒடுக்கப்பட்ட சாதியினரின் வாழ்க்கை நிலை என்ன என்பது வெளியே வரும். வறுமையில் யார் அதிகமாக பாதிக்கப்பட்டிருக்கிறார்கள், யார் கல்வியில் பின்தங்கியிருக்கிறார்கள், யாருக்கு வீடில்லை, யார் ஊட்டச்சத்து குறைபாடுடன் இருக்கிறார்கள் என்பது தெரியவரும். அது தெரிய வருவது ஆர்.எஸ்.எஸ்-க்கு ஆபத்து. இந்து ஒற்றுமை என்று ஒரு போர்வையை போட்டு மூடி வைத்திருக்கிறார்கள். முஸ்லிம் எதிரி, இந்து ஒற்றுமை என்ற ஒரு மாய்மாலம் சாதி ரீதியான கணக்கெடுப்பு எடுத்தால் அந்த மாய்மானம் குலைந்து விடும். சாதிக்காக கணக்கெடுப்பு நடத்துகிறோம் என்று பீகார் அரசு கூறிய போது அதை எதிர்த்து இவர்கள் உச்ச நீதிமன்றம் வரை சென்று வழக்காடினார்கள். இதுதான் அவர்களின் வரலாறு.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP

Posted : September 29, 2023

owner and publisher by : k. rajendran, from 29, Journalists colony, thiruvalluvar nagar, thiruvanmiyur, chennai - 600 041.
and printed by : S. Theesmas, at lilly soosai offset, new no.8, old No.12/1, mohammed usain lane, royapettah, chennai - 600 014.
editor ; k. rajendran